# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 16 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 11

## கிருட்டிணன் தூது சருக்கம்

1 மகாபாரத மூல நூலை இயற்றியவர் யார்? அதை தமிழில் இயற்றியவர் யார்?

2. பருவம், சருக்கம் என்பனவற்றிற்கான விளக்கங்களை தருக.

3. திருகராட்டினனின் புதல்வர்கள் யாவர்? பஞ்சபாண்டவர்களின் தந்தை யார்?

4. **செய் வரால் இனம் உகலும் திருநாடு**
**பெற நினைவோ சென்று மீளப் பைவராய்...**
அ. இங்கு செய் என்பது குறிக்கும் பொருள் யாது?
ஆ. திருநாடு எனக் குறிக்கப்படும் நாடு எது?

5. **ஐவராம் அவனிபார் நினைவு ஏது என்று**
**அருள் புரிந்தான் அமரர் கோமான்...**
அ. இங்கு ஐவர் எனப்படுவோர் யாவர்?
ஆ. அமரர் கோமான் இங்கு யார்?

6. **கயிரவமும் தாமரையும் கமழ் பழனக்**
**குருநாட்டில் கலந்து வாழ...**
அ. கயிரவம் என்பது உணர்த்தும் கருத்து யாது?
ஆ. இவ்வடிகளில் குருநாட்டின் எத்தகைய சிறப்பு காட்டப்படுகிறது?

7. **உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள்வாய்**
**என்றான் அறத்தின் உருவம் போல்வன்...**
அ. உயிர் அனையாய் என குறிப்பது இங்கு யாரை?
ஆ. அறத்தின் உருவம் போல்வான் யார்?
இ. சந்துபட என்பது யாது?

8. **அரவு உயர்த்தோனுடன் மறுசூது ஆடி நீர் வென்ற**
**அந்நாள் அவன் தான் சொன்ன...**
அ. அரவு உயர்த்தோன் எனப்படுபவன் யார்?
ஆ. மேற்படி பாத்திரத்துடன் தொடர்புடைய இதிகாசம் எது?

9. **குரவரையும் கிளைஞரையும் குலத்து உரிய**
**துணைவரையும் கொன்று..**
அ. இங்கு கிளைஞர் என்பதன் பொருள் ?
ஆ. குரவர் எனக் குறிப்பதன் கருத்து யாது?

10. **கரவு உறையும் மனத் தாதை முனிக்கு உரைத்த**
**மொழிப்படியே கான் தோறும்..**
அ. கரவு உறையும் மனத்தாதை என விளிக்கப்படுவது யார்? கரவு என்றால் என்ன?
ஆ. முனி என குறிப்பிடப்படுபவன் யார்?

11. **கோது இலான் இந்தமொழி கூறுதலும்**
**மாமாயன் கூறல் உற்றான்..**
அ. கோது இலான் என்பதன் பொருள் யாது? அவன் யார் ?
ஆ. மாமாயன் எனக் கருதப்படுவது யாரை?

12. **தாது ஊதி அளி முரலும் தண்பதியும்**
**தாயமும் தான் தாரான் ஆகில்..**
அ. அளி, தண்பதி என்பன உணர்த்தும் பொருள்?
ஆ. தாயம் எனக் குறிப்பதன் கருத்து யாது?

13. **முந்து ஊர் வெம் பணிக் கொடியோன் மூதூரில்**
**நடந்து உழவர் முன்றில் தோறும்...**
அ. இங்கு வெம் பணிக் கொடி என்பது யாது?
ஆ. மூதூர் எனக் கருதப்படும் நாடு எது?
இ. இங்கு வெம் பணிக் கொடியோன் யார்?

14. **நந்து ஊரும் புனல் நாட்டின் திறம் வேண்டு**
**நாடு ஒன்றும் நல்கான் ஆகில்..**
அ. நந்து என இங்கு குறிக்கப்படுவதன் பொருள்?
ஆ. இவ்வடிகளில் குருநாட்டின் எத்தகைய சிறப்பு வெளிப்படுகிறது?

15 **சிந்தூரத் திலக நுதல் சிந்துரத்தின்**
**மருப்பு ஒசித்த செங்கண் மாலே...**
அ. இங்கு செங்கண் மால் எனப்படுவது யாரை?
ஆ. சிந்தூரம், சிந்துரம் என்பது குறிக்கும் பொருள்கள் எவை?

16. **மூத்தோன் மற்று இவை உரைப்ப இளையோன்**
**வெஞ்சினம் மனத்தில் மூளமூள..**
அ. இங்கு மூத்தோன் எனப்படுபவன் யார்?
ஆ. இளையோன் எனப்படுபவன் யார்?

17 **ஞாலம் எல்லாம் பூத்தோனே பூந்தவிசில்**
**பூவை புணர் மணிமார்பா,...**
அ. இங்கு ஞாலம் எல்லாம் படைத்தவன் யார்?
ஆ. பூந்தவிசு என்பதன் கருத்து யாது?
இ. பூவை எனப்படுபவது இங்கு யார்?
ஈ. கண்ணன் தன் மார்பில் அணிந்துள்ள மணி யாது?

18. **அரவு உயர்தோன் கொடுமையினும் முரசு உயர்த்தோய்**
**உனது அருளுக்கு அஞ்சினேனே..**
அ. அரவு உயர்த்தோன் இங்கு யார்?
ஆ. முரசு உயர்த்தோன் எனப்படுபவன் யார்?

19. **கான் ஆள உனை விடுத்த கண் இலா**
**அருளிலிதன் காதல் மைந்தன்...**
அ. கண் இலா அருளிளி இங்கு யார்? அருளிலி என சுட்டப்படுவதன் காரணம் யாது?
இ. காதல் மைந்தன் எனக் கருதுவது யாரை?

20 **வான் ஆள வானவர் கோன் தன் பதம் மற்று**
**அவன் தனக்கே வழங்குவேனே...**
அ. இங்கு வானவர் கோன் எனப்படுவது?
ஆ. இந்திரனின் தலைநகரமாக கருதப்படுவது?

21. **அமர் பொருது புலம்புறு சொல் பாஞ்சாலி**
**பூந்தண் கூந்தல்கார் முடித்தான்...**
அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
ஆ. கூந்தல் கார் என்பதில் உள்ள அணி யாது?

22. **கடவுள் கங்கை நீர் முடித்தான் இரவு ஒழித்த**
**நீ அறிய..**
அ. கங்கை நீர் முடித்தான் எனப்படுவது யாரை?
ஆ. இரவு ஒழித்த என்பதன் பொருள் யாது?

23 **பரிவுடன் மற்று இவை கூறும் பவன குமாரனை**
**மலர்க்கை பணித்து நோக்கி..**

அ. இதில் பவன குமாரன் எனப்படுவது யார்?

ஆ. மலர்க்கை என்பதில் இடம்பெற்றுள்ள அணி யாது?

24. **குருகுலத்தோர் போர் ஏறே குற்றமது**
**பார்க்குங்கால் சுற்றம் இல்லை...**

அ. குருகுலத்தோர் போர் ஏறு யார்?

ஆ. இக் கூற்றைக் கூறியது யார்?

25. **சூடுகின்ற துழாய் முடியோன் சுரருடனே**
**முனிவர்களும் சுருதி நான்கும்...**

அ. சூடுகின்ற துழாய் முடியோன் இங்கு யார்? துழாய்முடி என்பது யாது?

ஆ. சுரர் என்பது உணர்த்தும் கருத்து யாது?

26. **கோடுகின்ற மொழியவன்பால் எனைத் தூது**
**விடுக இனி கொற்ற வேந்தே...**

அ. கோடுகின்ற மொழியவன் எனக் குறிப்பது யாரை?

ஆ. கொற்ற வேந்தன் எனப்படுபவன் யார்?

## பகுதி 2

01. இப்பகுதியில் தருமனின் பொறுமை (சமாதான மனப்பாங்கு) எவ்வாறு வெளிப்படுத்தப் படுகின்றது?

02. இப்பாடப் பகுதியில், வீமனது கோபாவேசம் எவ்வாறு வெளிப்படுகின்றது.?

03. இப் பாடப் பகுதியில், வீமனை சமாதானம் செய்யும் வகையில் தருமன் கூறிய வார்த்தைகள் எவை.?

04. இப் பாடப்பகுதியில், கண்ணன் பெருமைகள்/சிறப்புக்கள் எவ்வாறு வெளிப்படுகின்றது.?

05. இப்பாடப் பகுதியில் குருநாட்டின் சிறப்பு வெளிப்படும் தன்மை பற்றிக் குறிப்பிடுக.?

06. இப் பகுதியில் தருமன் மற்றும் வீமன் ஆகியோரின் குணப்பண்புகளைக் குறிப்பிடுக.?

07. கிருட்டிணன் தூது சருக்கத்தில் இடம்பெறும் திரௌபதியின் பாத்திர சித்தரிப்பை ஆராய்க.